# கூடுதல் மாவட்ட  நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.88/2025

### அ.சா.  6 (LW 9 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **கார்மேகம்** | **தொழில்** | |
| **த/ பெயர்** | ஆறுமுகம் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | **20.07.2026** |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு  10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 மற்றும் 3   எதிரிகள் ஆஜர்.   2 ம் எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு,  அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது திண்டுக்கல் நெட்டுத் தெருவில் குடியிருந்து வருகிறேன்.  அரிசி வியாபாரம் செய்கிறேன். கடந்த 19.03.2019 அன்று  நெட்டுத் தெரு நாட்டாமையின் பேரன் இறந்து விட்டதாக சொன்னார்கள், கேள்விப்பட்டு நானும் என்.எஸ் கம்யூனிட்டி ஹாலுக்கு இரவு சுமார் 12.15 மணிக்கு இருக்கும்,  அப்போது  போனேன். அப்போது அங்கே 4,5 நபர்கள் இருந்தார்கள். நான் போய் பார்த்த போது பிரேதத்தை அப்புறப்பத்தி படுத்தி விட்டார்கள், அப்போது சம்பவ இடத்திற்கு போலிசார் வந்தார்கள். போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு அங்கேயிருந்தவர்களை விசாரித்து வரைபடம் போட்டார்கள். எழுதிக் கொண்டதில் என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். பார்வைமகஜரிலுள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும்  **அ.த.சா.ஆ.3.** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான்.  அப்போது சம்பவ இடத்தில் இரத்தம் பட்டமண், இரத்தம் படாத மண்ணை கைப்பற்றினார்கள், அந்த அத்தாட்சி **அ.த.சா.ஆ.4.** ஆக குறியீடு செய்யப்படுகிறது.  போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் சம்பவ இடம் செல்லும் போது என்னுடன் பல நபர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்போது எங்கள் தெருவைச் சேர்ந்த  கணேசன் என்பவரும் இருந்தார்.  நான் சம்பவ இடம் போன பிறகுதான் போலிசார் வந்தார்கள்.  போலிசார் வந்த பின்பு எவ்வளவு நேரம் இருந்தார்கள் என்றால் 1/2 மணி நேரம் இருந்தார்கள்.  அந்த 1/2 மணி நேரத்திற்கு போலிசார் கிளம்பி விட்டார்களா என்றால் நான் கிளம்பி விட்டேன். நான் கையெழுத்து போட்டதாக சொல்லும் 2 ஆவணங்களிலும் ஒரே நேரத்தில்

கையெழுத்து செய்தேனா என்றால் ஆமாம். அந்த 2 கையெழுத்துக்களும் 1/2 மணி நேரத்திற்குள் போடப்பட்டதா என்றால் ஆமாம். நான் சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில் கையெழுத்து செய்யவில்லை என்றாலும் காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு கையெழுத்து செய்தேன் என்றாலும் சரியல்ல. வழக்கில் இறந்தவர் எனக்கு தெரிந்தவர் என்பதால் அவர் சார்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2,3 எதிரிகள் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்வதாக தெரிவித்தார்**

**மறு விசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.07.21 20:45:13 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.